## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்கள எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

----------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஆணைக்குழுவின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்துடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 05 ஆண்டுகளில் திரும்பவும் மீளப் பெறக்கூடிய வகையிலும் தனியார் நிறுவனமொன்றில் வைப்பில் இடப்பட்டிருந்த ரூபா 12,280,195 தொகையில் ரூபா 2,674,746 தொகையானது இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு நியமம் 1 இற்கு முரணாக நடைமுறைச் சொத்தாக நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | வாடகை ஒப்பந்தத்திற்கு அமைய செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகைக்கேற்ப ரூபா 9,607,449 வைப்பானது ஆண்டொன்றிற்கும் அதிகமான காலத்திற்கு முன்னரே செலுத்தப்பட்டிருந்ததுடன், நடைமுறை அல்லாத சொத்தாகக் கணக்கு வைத்தல் சரியானதாகும். ரூபா. 2,674,946 தொகையான வைப்பானது 2019 ஆம் ஆண்டில் | நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்ததுடன் அது ஒரு வருடத்திலும் குறைவான காலம் என்பதால் நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களுக்கு குறித்த பெறுமதி மாற்றப்படும். | |
| (ii) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கு அமைய சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கமைய வெளிப்படும் மதிப்பிடப்படும் குறைபாடுகள் மீள் திருத்தம் செய்யப்பட வேண்டுமாயினும் முழுமையாக தேய்வடைந்துள்ள ஆயினும் தற்போது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் ரூபா. 36,147,267 கூட்டுத்தொகையான சொத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இற்கு அமைய மோட்டார் வாகனங்களின் பயன்படு ஆயுட்காலம் 2018 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் வருவாய் இலாபம் 2018 ஆம் ஆண்டில் சரியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஏனைய சொத்துக்களை கணக்கெடுத்தல் செய்வதற்குக் கணக்காய்வுக் குழுவின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் மோட்டார் வாகனங்களில் மட்டும் 3 வருடத்திற்கு ஒரு தடவை கணக்கெடுத்தல் செய்வதற்குக் கணக்காய்வுக் குழு மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,723,000 பெறுமதியான கணனி மென்பொருளொன்று நிறுவனத்தின் கட்புலச் சொத்தாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் அந்த சொத்தினை தேய்விடுவதற்கும், இலங்கைக் கணக்கீட்டுத் நியமம் 20 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் இந்த மென்பொருளுக்காக 2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூபா. 844,167 கொடுப்பனவு முன்னைய கொடுப்பனவின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இந்த மென்பொருள் தொடர்பில் குறித்த வழங்குனருடன் ஏற்படுத்தப்பட்ட எழுத்துமூல ஒப்பந்தம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த மென்பொருளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா. 844,167 தொகையானது முற்கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்டு மாதாந்த வருமானம் மற்றும் செலவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருப்பதுடன் இது வருடாந்தம் செலுத்தும் அனுமதிப் பத்திரக் கட்டணம் என்பதுடன் ரூபா. 4,723,000 என்பது 05 வருடங்களுக்குச் செலுத்த வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணமாகும். இது வருடாந்தம் செலுத்தப்படுவதாலும் ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்திற்கு பிரதிபலன் கிடைக்காததாலும் இதனை கட்புலச் சொத்தாக கணக்கீடு செய்ய முடியாதுள்ளது. அதனால் இந்த வருமானம் மற்றும் செலவு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல். |

### 1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் (2) 6 (ஈ) பிரிவு | ஆணைக்குழுவினால் அதன் அதிகாரங்கள், செயற்பாடு, கடமைகளை நடைமுறைப்படுத்துகையில், நிறைவேற்றுகையில் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும் அனைத்து பணமும் அதன் வருமானமாக அறியப்பட வேண்டியிருப்பினும், 2019 ஆம் ஆண்டில் செஸ் வரியாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.493,068,161 தொகையும் மற்றும் 2019 ஆம் ஆண்டில் காப்புறுதியாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு உரிய ரூபா.574,313,018 தொகையான வட்டி வருமானம் ஆணைக்குழுவின் மீளாய்வு ஆண்டின் வருமானமாக அறியப்பட்டிருக்காததுடன் கடந்த வருடத்திலும் இந்த நிலைமை இவ்வாறே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் குறிப்பு இலக்கம் 7 இன் பிரகாரம், அனைத்து வருமானங்களும் வேறு வேறாக PPF இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் வருமானம், வருமானக் கூற்றில் சரியாக எடுத்துக் காட்டப்பட்டு காப்புறுதிப்பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்குக் கிடைக்கும் வருமானம் வேறு வேறாக காப்புறுதிப்பத்திர உரிமையாளர்களின் நிதியத்தின் வருமானமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | வருமானத்தினை சரியாக இனங்கண்டு சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலினை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 48(1)ஆம் பிரிவு | அனைத்து காப்புறுதியாளர்களினாலும் அந்த வியாபாரத்தின் காப்புறுதியாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட, ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் உயிரியல் மதிப்பீட்டாளரைக் கொண்டு ஆராய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுடன், சபையினால் தயாரிக்கப்படும் விதிகளுக்கு இணங்க எடுத்துக்காட்டுகளைத் தயாரிப்பதற்குச் சபையினால் நடவடிக்கை ஏற்படுத்தப்படல் | உலக வங்கி உதவியின் கீழ் செயற்படும் நிதித் துறையினை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் (Finance Sector Modernization Project) மூலம் இது வைரயிலும் மதிப்பீட்டு ஆலோசகர் ஒருவரை நியமித்து இது வரையிலும் அவர் மூலமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உயிரியல் கணிப்பீடு அறிக்கையை மீளாய்வு செய்தலை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டும். அவ்வாறிருக்க, ஆணைக்குழுவினால் உயிரியல் கணிப்பீட்டாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படும் காரணத்தினால் காப்புறுதியாளர்களினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் உயிரியல் கணிப்பீடு அறிக்கை மீளாய்வு செய்வதற்கு நிலையான வேலைத் திட்டமொன்றை மேற்கொள்ள ஆணைக்குழு தவறியிருந்தது. | | |
| (iii) | 2003 ஜூன் 02 ஆம் திகதி கொண்ட PED/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | நிர்வாகக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு அதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் திறைசேரி செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பினும் 2020 ஜூலை 31 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழு பயன்படுத்தும் கையேட்டிற்கு திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. அவ்வாறிருக்க முற்பணம் செலுத்துதல் வாகனக் கடன் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் அனுமதி பெறப்படாத நிர்வாகக் கையேட்டின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டன. | நிர்வாக கையேடு திறைசேரி அனுமதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக 2017.03.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் PE/REG/IRCSL/PR ஆம் இலக்க மற்றும் 2018.04.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது நிர்வாகக் கையேடு மதிப்பீட்டில் காணப்படும் முறைகளின் சிக்கல்கள் காரணமாக அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதாகும். அவ்வாறே இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் தனது நிறுவன நடவடிக்கைகளில் காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் உள்ள ஒழுங்குகளுக்கு அமைய ஆணைக்குழுவின் அனுமதியுடன் நிர்வாகக் கையேடு பின்பற்றப்படும். | குறித்த சுற்றறிக்கை விதிகளின்படி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய இணக்கப்பாடுகளை நிர்வாகக் கையேட்டில் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 07 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரிக்கு உட்பட வேண்டிய மொத்தத் தொகையான ரூபா.1,067,381,178 மீளாய்வு ஆண்டிற்குரிய வருமான வரி, பொறுப்புகள் கணக்கீட்டில் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | 2017 இன் 24 ஆம் இலக்க வருமான வரிச் சட்டத்திற்கு அமைய இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் மிகைக்காக வருமான வரி பெறுமதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. காப்புறுதிப் பத்திர | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஒழுங்குகளின் பிரகாரம் வருமான வரி கணக்கிடுவதற்கு நடவடிக்கை |

| | |
|---|---|
| உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு கிடைக்கும் (PPF) செஸ் மற்றும் வட்டி வருமானத்திற்கான வரியினை விடுவித்துக் கொள்ளுவதற்குரிய விண்ணப்பம் நிதி அமைச்சிற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான முடிவொன்றை எதிர்பார்த்துள்ளோம். அதற்காக காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நிதி அமைச்சிற்கு அனுப்பியுள்ள கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு எம்மால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா.129,218,719 மிகையாகக் காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா. 41,337,937 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா. 87,880,782 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் அதிகரித்தமையே பிரதான காரணமாகக் காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவுப் போக்குகளின் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் வருமானம் 82 சதவீத அதிகரிப்பினை காட்டியுள்ள போதிலும் பதவியணியினரின் மொத்த செலவு மற்றும் நிதி மற்றும் வேறு செலவுகள் முறையே 42 சதவீதத்தினாலும் மற்றும் 909 சதவீதத்தினாலும் அதிகரித்துக் காணப்பட்டது. அவ்வாறிருக்க கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிக்கு முந்தைய மிகையில் ரூபா. 108,021,452 அதிகரிப்பு 250 சதவீத அதிகரிப்பாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காப்புறுதித் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் 13 (1) (இ) பிரிவின்படி புதிதாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் காப்புறுதி நிறுவனத்தினால் சபையினால் தீர்மானிக்கப்படும் பணத் தொகையினை பொதுத் திறைசேரியில் வைப்புச் செய்தல் வேண்டும். அவ்வாறு வைப்பிலிடப்படும் தொகை தொடர்பில் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் பேணப்பட்டு வரும் அட்டவணை மற்றும் ஆணைக்குழுவினால் பேணப்பட்டு வரும் அட்டவணைகளுக்கு இடையில் ரூபா. 3,700,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய குறித்த வேறுபாட்டிற்காக காரணத்தை ஒப்பிட்டு வைப்பு சீட்டினை நாளதுவரையாக பேணப்பட்டு வந்திருக்காமை அவதானிக்கப்பட்டது. | திறைசேரி வைப்புக்கள் திணைக்களத்தின் அதற்குரிய வைப்பு அறிக்கையில் பணம் செலுத்தியவர்கள் தொடர்பான பெயர் அல்லது வேறு விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. அதனால் இந்த வைப்புக்கள் இதற்காகக் கிடைக்கப் பெற்ற வைப்புக்கள் தானா என உறுதிப்படுத்த முடியாது. ஆயினும் ஆணைக்குழுவினால் பேணப்பட்டு வரும் அறிக்கையில் பெயர் உள்ளிட்ட அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் எம்மால் பேணப்பட்டு வரும் அறிக்கை சரியானது என்பது எமது நம்பிக்கையாகும். | உரிய தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட 11 காப்புறுதி நிறுவனங்கள் தொடர்பில் மேற்கூறிய (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்பு தொடர்பான தகவல்களை ஆணைக்குழு பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்குவதற்கு எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய தகவல்கள் முறையாகவும் மற்றும் முழுமையாகவும் பேணப்படுதல் வேண்டும். |
| (iii) | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 1,208,602 தடுத்து வைக்கப்பட்ட வரி மீதியை மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஆண்டுகளில் ரூபா. 1,208,602 தீர்க்கப்படாத வரி காணப்படுவதற்கு காரணம் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அந்தக் காலப் பகுதியினுள் வருமான வரி செலுத்துவதற்கான பொறுப்பு காணப்படாமை | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆகும். 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைய இலங்கைக் காப்புறுதி ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. அந்தச் சட்டம் 2017 இன் 24 ஆம் இலக்க புதிய சட்டத்திற்கமைய வருமான வரி செலுத்தப்பட வேண்டியதுடன் 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஆண்டுகளில் தடுத்து வைக்கப்பட்ட வரியினை தீர்ப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. | |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ஆணைக்குழுவானது 2016 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் காப்புறுதி நிறுவனங்களில் கடனளி சட்டக் கட்டமைப்பிற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆபத்துக்களின் அடிப்படை மூலதனத்தைப் பிரதானமாகக் கொண்ட அவதானம் மிக்க முறையில் (RBC) ஈடுபடுவதனால் உயிரியல் கணிப்பீட்டு அலகொன்றை ஏற்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட நிறைவேற்றுத் தரத்திலான 05 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டன. | இரு நிறைவேற்றுத் தரத்திலான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் வெற்றிடமாகக் காணப்படும் உயிரியல் கணிப்பீடு மற்றும் உதவி உயிரியல் கணிப்பீடு பதவிகளுக்காக பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆணைக்குழுவின் செயற்றிறனுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பதவியணி வெற்றிடமானது உடனடியாக நிரப்பப்படல் வேண்டும். |